**26.10.2023**

## வணிகவரித் துறை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட "சமாதானத் திட்டம்" முதன் முறையாக இணைய வாயிலாகவே வணிகர்கள் விண்ணப்பித்து பயனடையும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் சிறப்பியல்புகளை விளக்கும் வகையில் இன்று (26.10.2023) நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரித்துறை வளாகத்தில் வணிகவரி பணியாளர் பயிற்சி நிலையம் (CTSTI) வாயிலாக, 19 வணிகவரி கோட்டங்களைச் சார்ந்த அனைத்து கள அலுவலர்களுக்கும் சமாதான திட்டத்தினை நடைமுறை படுத்துவது தொடர்பான இணைய வழி பயிற்சி வகுப்பினை மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு. பி. மூர்த்தி அவர்கள் துவக்கி வைத்தார், இந்த பயிற்சியில் 1000ற்கு மேற்பட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் அரசு செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை திருமதி. பா. ஜோதி நிர்மலாசாமி, இ.ஆ.ப., வணிகவரி ஆணையர் முனைவர் திரு.டி.ஜகந்நாதன், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினர்.

மேலும் இதன் தொடர்ச்சியாக 31.10.2023 அன்று மதுரையில், மதுரை, திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் திருச்சி கோட்டத்தைச் சார்ந்த வணிகர்களுக்கு இத்திட்டம் குறித்த விழிப்புணர்வு கூட்டம் மாண்புமிகு அமைச்சர் தலைமையில் நடைபெறும் என்று தெரிவித்தார்கள்